**12.11.2025.**

**O.S.No.111/2001 மற்றும் O.S.No.48/2005**

**வா.சா.1 : ரங்கநாதன்**

**<u>8,10 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) அசல் வழக்கு எண்.111/2001ல் 2ம் பிரதிவாதியாகவும் அசல் வழக்கு எண். 48/2005ல் 1ம் பிரதிவாதியாகவும் காட்டப்பட்டுள்ள தர்மலிங்கம் எனது அண்ணன் என்றால் சரிதான். அவர் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார். அவருடைய 2வது மனைவி தான் ராஜாத்தி. ராஜாத்தியின் மகன் மகள் தான் 10 முதல் 12 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது அண்ணனின் முதல் மனைவியின் பெயர் பெரியம்மாள். பெரியம்மாள் இறந்த 3 வருடங்களுக்கு பின்னிட்டு தான் ராஜாத்தியை திருமணம் செய்து கொண்டார். தர்மலிங்கம் இறந்த பின்னிட்டு அவருடைய வாரிசுகளை தரப்பனராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் கண்டுள்ள சிவானந்தம் எனது அண்ணனின் முதல் மனைவியின் மகன். அவரை இரு வழக்கிலும் தரப்பனராக சேர்த்துள்ளேன். எங்கள் குடும்பத்தின் சொத்துக்களான அப்பம்மசமுத்திரம் கிராமத்திலும் தென்னங்குடிபாளையம் கிராமத்தில் உள்ள சொத்துக்கள் எங்கள் குடும்ப பொது சொத்துக்கள் என்றால் சரிதான்.

2) நரசிங்கபுரம் கிராமத்தில் உள்ள சொத்து எனது தாயார் வாங்கிய சொத்து என்றால் எனது தாயார் கிரயம் வாங்கிய சொத்து. எனது தாயார் சின்னபிள்ளை 07.10.2004ல் இறந்துவிட்டார். அதன் பின்னிட்டு தான் அசல் வழக்கு எண்.48/2005 வழக்கு புதியதாக தாக்கல் செய்யப்பட்டது. அப்பம்மசமுத்திரம் கிராமத்திலும் தென்னங்குடிபாளையம் கிராமத்தில் உள்ள சொத்துக்கள் எங்கள் குடும்ப பொது சொத்துக்கள் என்பதால் பாகப்பிரிவினை கோரி ஆத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.95/2003 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் கேட்ட படி 1/4 பாகம் வழங்கி அந்த வழக்கின் விசாரணை முடிந்து 15.04.2025ல் தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான்.

அந்த முதல் நிலை தீர்ப்பாணை அனுசரித்து இறுதி நிலை தீர்ப்பாணை கோரி இடைநிலைமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) நான் கேட்ட 1/4 பங்கு போக மீதி 3/4 பங்கு 1.லேட்.தர்மலிங்கம் வகையறாவுக்கும், 2. கோவிந்தனுக்கும் 3.லேட்.சுப்ரமணி வகையறாவுக்கும் சேரதக்கது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பு தற்போது வரை அமலில் இருந்து வருகிறது. எனது அம்மா சின்னப்பிள்ளை அம்மாள் கிரயம் வாங்கிய சொத்தை எனக்கு 30.06.1995ல் 03.05.1995 தானமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு தான செட்டில்மெண்ட் பத்திரங்களும் 24.05.2001 ம் தேதி ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4) மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் ரத்து செய்யப்பட்டது செல்லாது என்று எந்த நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அசல் வழக்கு எண்.111/2001 வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல அசல் வழக்கு எண். 111/2001 வழக்கு அந்த பரிகாரம் குறித்து கோரப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சி சொத்தில் உரிமை உண்டு என்று வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்கிறார். தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் ரத்து செய்யப்பட்ட பின்னிட்டு தாவா சொத்து குறித்து என் பெயரில் எவ்வித பத்திரங்களும் இல்லை என்றால் சரிதான். இரண்டு தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் குறித்து தனித்தனியாக விளம்புகை பரிகாரம் கோரி இருக்க வேண்டுமே தவிர ஒரே பரிகாரமாக கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. 24.05.2001 தேதியிட்ட ரத்து பத்திரங்களின் அசல் என்னிடம் இல்லை என்றால் சரிதான். நகல் தான் தாக்கல் செய்துள்ளேன்.

5) மேற்படி இரண்டு ரத்து பத்திரங்களிலும் மேற்படி எனது தாயார் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் அமலுக்கு வராததாலும் அதை அமல்படுத்த விரும்பாததாலும் அந்த சொத்தின் சுவாதீனம் தன்னிடமே இருப்பதாலும் தனக்கு அன்னவஸ்திரம் கொடுக்க ஆதரவு செய்யாததாலும் சொத்தை பொறுத்து வேறு ஏற்பாடு செய்ய இருப்பதாலும் மேற்படி தான செட்டில்மெண்ட் செல்லத்தக்கது அல்ல

என்று எழுதி உள்ளார்கள் என்றால் அவ்வாறு சொல்லப்படுவதற்கு எனக்கு எழுதப்பட்டுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரங்களில் ரத்து செய்வதற்கு வாசகம் இல்லை. மேற்படி தான செட்டில்மெண்ட் ரத்து பத்திரங்கள் ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ரத்து பத்திரங்கள் எழுதிய விவரம் அப்போதே தெரியும் என்றால் எழுதிய 1-1/2 மாதம் கழித்து தான் தெரியும். நான் பெற்ற தானசெட்டில்மெண்ட் பத்திரங்களில் பெற்ற சொத்து விவரமும் பிழைத்திருத்த பத்திரங்களிலும் கண்டுள்ள சொத்து விவரமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

6) எனது தாயார் எனக்கு சுயமாக தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைத்ததாக சொல்வது தவறு என்றும் அது பெயரளவுக்கு எழுதி வைத்ததால் தான் எனது தாயார் அந்த பத்திரங்களை பின்னிட்டு ரத்து செய்துவிட்டார் என்றும் அது தெரிந்து இருந்தும் அது உண்மை என்பதால் தான் அதை நான் ஒப்புக்கொண்டு நான் அந்த ரத்து பத்திரங்களை குறித்து எவ்வித சட்ட நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் அனைத்தும் போலியான ஆவணங்கள் என்றும் அவை தாவா சொத்துக்களையோ இந்த பிரதிவாதிகளையோ கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

7) மேற்படி தாவா சொத்து எனக்கு மட்டுமே பாத்தியப்பட்ட தனித்த சொத்துக்கள் அல்ல என்பதாலும் செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டதாலும் தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனவே தாவா சொத்துக்களில் எவ்வித பரிகாரமும் கோர உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து விவரத்தில் உள்ள சொத்து விவரங்களும் தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் மற்றம் பிழை திருத்த பத்திரங்களில் கண்டுள்ள சொத்து விவரங்களும் தவறானவை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கோரி உள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தற்போது தாவாவில் கண்டுள்ள சொத்துக்கள் தற்போது கடை மற்றும் வீடாக உள்ளது. நான்

சொல்வது போல  கடை மற்றும் வீடாக உள்ளது என்று சொல்வது தவறானது என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.12 17:38:15 +0530

**Subordinate Judge, Attur.**